# எள் சாகுபடி தொழில்நுட்பங்கள்

**பருவம்**

அ. மானாவாரி : ஆடிப்பபட்டம் (ஜுன்-ஜுலை), கார்த்திகை பட்டம் (அக்டோபர்-நவம்பர்)

ஆ. இறவை : மாசிப்பட்டம் (பிப்ரவரி-மார்ச்)

**இரகங்கள்**

கோ1, டி.எம்.வி.3, டி.எம்.வி 5, எஸ்.வி.பி.ஆர் 1, வி.ஆர்.ஐ (எஸ்.வி)1

**விதையளவு**

விதை அளவு எக்டருக்கு 5 கிலோ

**விதைநேர்த்தி**

இரண்டு கிலோ விதையுடன் 4 கிராம் திரம் அல்லது கார்பென்டாசிம் மருந்தைக் கலந்து 24 மணி நேரம் கழித்து விதைக்க வேண்டும். இதை பூஞ்சாண கொல்லியுடன் கலக்கக் கூடாது. 25 சத தழைச்சத்தானது 3 பாக் அசோஸ்பைரில்லம் (600 கிராம் / எக்டர்) மற்றும் 3 பாக் (600 கிராம் / எக்டர்) பாஸ்போபாக்டிரியம் அல்லது 6 பாக் அசோபாஸ் (1200 கிராம் / எக்டர்) மூலம் விதை நேர்த்தி செய்யும் போது 10 பாக் அசோஸ்பைரில்லம் (2000 கிராம் / எக்டர்) மற்றும் 10 பாக் (2000 கிராம் / எக்டர்) பாஸ்போபாக்டீரியா அல்லது 20 பாக் அசோபாஸ் (400 கிராம் / எக்டர்) மண்ணில் இடுவதன் மூலம் சரி செய்யப்படுகின்றது.

**விதைக்கும் முறை**

ஐந்து கிலோ விதையுடன் 20 கிலோ மணல் கலந்து நிலத்தின் மேற்பரப்பில் சீராக தூவ வேண்டும்.

**இடைவெளி**

விதைத்த 15-ம் நாள் செடிக்குச்செடி 15 செ.மீ இடைவெளி விட்டு செடிகளை கலைத்துவிட வேண்டும். பின்பு 30ம் நாள் செடிக்குச் செடி 1 அடி இடைவெளி விட்டு மீண்டும் ஒரு முறை கலைத்து விடுவது சிறந்தது.

## ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை

### உரமும் உரமிடுதலும்

### தொழு உரம்

மக்கிய தொழு உரம் உழவிற்கு முன்பு இடவும்.

### இரசாயன உரம்

மண் பரிசோதனைப் பரிந்துரைப்படி உரமிடுதல் சிறந்தது. அவ்வாறு செய்யாவிடில் பொதுவான பரிந்துரையின்படி கீழ்க்கண்டவாறு இடவும்.

| பயிர் | | ஒரு எக்கருக்கு இடவேண்டிய சத்துக்கள் (கிலோ) | | |
|---|---|---|---|---|
| | | யூரியா | சூப்பர் | பொட்டாஷ் |
| எள் | மானாவாரி | 20 | 32.5 | 9 |
| | இறவை | 30 | 57.5 | 15 |

### களைக் கட்டுப்பாடு மற்றும் பின்செய் நேர்த்தி

விதைத்த 15 நாட்கள் கழித்து கைக்களையும், 35 நாட்கள் கழித்து இரண்டாவது கைக்களையம் எடுத்துக் களைகளை கட்டுப்படுத்த வேண்டும்.

### நீர் நிர்வாகம்

எள்ளிற்கு மண்ணின் தன்மை, பருவகாலம் ஆகியவற்றைப் பொருத்து சுமார் 5 அல்லது 6 முறை நீர்ப்பாய்ச்ச வேண்டும். முதல் முறை விதை விதைத்தவுடன் 7-வது நாள் உயிர்த் தண்ணீர், 25-வது நாள் பூக்கும் தருவாயில் 2 முறை, காய் பிடிக்கும் தருவாயிலும், முதிர்ச்சியடையும் போதும் 2 முறையாக சுமார் 6 முறை நீர்ப்பாய்ச்ச வேண்டும். பூ பூக்கும் பருவம் காய் பிடித்து முற்றும் பருவத்தில் நீர் பாய்ச்சுவதைக் கவனமாக் கடைபிடிக்க வேண்டும். இறவைப் பயிரில் விதைத்த 65 நாட்களுக்குப்பின் நீர்ப்பாய்ச்சக் கூடாது.

### அறுவடைக்கான அறிகுறிகள்

1. செடியில் கீழிலிருந்து 25 சத இலைகள் உதிர்ந்து விடும்
2. காய்கள் மற்றும் தண்டுப் பாகங்கள் பழுப்பு நிறமாக மாறும்
3. செடியின் அடியிலிருந்து மேலாக உள்ள 10-வது காயில் உள்ள விதைகள் கறுப்பாக (முதிர்வு) மாறியிருக்கும்.

மேற்கண்ட அறிகுறிகள் தென்படும்பொழுது அறுவடை செய்துவிட வேண்டும். தவறினால் காய்கள் வெடித்து விதைகள் சிதறி மகசூல் மிகவும் குறையும்.